**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 212/2019</u>**

பெயர் : ராமதாஸ் D.W.3. Cross

த/பெ. : ராஜகண்ணு

தேதி : 12.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. வாதி எந்தெந்த புல எண்களுக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 600–700 சதுரடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள சர்ச்சை எந்த நிர்வாகம் நடத்தி வருகிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வாதியிடம் வாய்மொழியாக கேட்டு பெற்று சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அதை சுத்தம் செய்து தாவா சொத்தில் கீற்று கொட்டகை அமைத்து அதில் திருச்சபையை தொடங்கி நடத்தி வந்தார் என்ற விபரத்தை பிரதிவாதியே அவரது எதிர் வழக்குரையில் கூறாத நிலையில் அதை எனது நிருபண வாக்குமூலத்தில் மூலம் புகுத்த இயலாது என்றால் சரியல்ல.

2. நான் காவல் துறையில் பணிபுரிந்துள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் துறையிலிருந்து பணிநீக்கம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2017ம் ஆண்டு முதல் தாவா சொத்தில் உள்ள சர்ச் பூட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொடரிப்பேட்டையில் பிரதிவாதி சொந்தமாக சர்ச் கட்டி நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள சர்சானது 2017ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பூட்டப்பட்டுள்ளதால் பிரதிவாதி அதில் போதகராக பணிபுரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், அதில் அவர் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. பிரதிவாதியை எனக்கு 20 ஆண்டு காலமாக தெரியும். தாவா சொத்தின் புல எண், நான்கெல்லை, விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாத நிலையில் அதன் அனுபவத்தை பற்றி சாட்சியம் அளிக்க இயலாது என்றால்

சரியல்ல. பிரதிவாதி எனது நீண்ட கால நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.